# கோறளைப்பற்று பிரதேச சபை

## 59வது சபை அமர்வு (31.01.2023)

## கூட்டறிக்கை

**காலம்:** 31.01.2023 – செவ்வாய்க் கிழமை, காலை 9.00 மணி

**இடம்:** கோறளைப்பற்று பிரதேச சபையின், சபா மண்டபம்.

**தலைமை:** கௌரவ. தவிசாளர் கனகரெட்ணம் கமலநேசன்

கோறளைப்பற்று பிரதேச சபையின் 59ஆவது சபை அமர்வு, 31.01.2023 செவ்வாய்க்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு கோறளைப்பற்று பிரதேச சபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்றது. இவ் அமர்வில் கலந்து கொண்ட கௌரவ உறுப்பினர்களின் விபரங்கள்.

| | |
|---|---|
| 01. திரு. கனகரெட்ணம் கமலநேசன் | ~ கௌரவ தவிசாளர் |
| 02. திரு. தர்மலிங்கம் யசோதரன் | ~ கௌரவ உப தவிசாளர |
| 03. திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் | ~ கௌரவ உறுப்பினர் |
| 04. ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 05. திரு. சிற்றம்பலம் கிருபாகரன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 06. திரு. காளிக்குட்டி நடராசா | ~ கௌரவ உறுப்பினர் |
| 07. ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ் | ~ கௌரவ உறுப்பினர் |
| 08. ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் | ~ கௌரவ உறுப்பினர் |
| 09. திரு. பொன்னையா புஸ்பேந்திரன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 10. திரு. சீனித்தம்பி தர்மலிங்கம் | ~ கௌரவ உறுப்பினர |
| 11. ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர் | ~ கௌரவ உறுப்பினர் |
| 12. திரு. குணராசா குணசேகரன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 13. திரு.கந்தசாமி பகீரதன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 14. திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 15. திரு. சாமித்தம்பி மணிசேகர் | ~ கௌரவ உறுப்பினர் |
| 16. திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர் | ~ கௌரவ உறுப்பினர் |
| 17. திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி | ~ கௌரவ உறுப்பினர் |
| 18. திருமதி. பொன்னையா கலைவாணி | ~ கௌரவ உறுப்பினர |
| 19. ஜனாபா. மஹ்முதுலெவ்வை நபீரா | ~ கௌரவ உறுப்பினர் |
| 20. திரு. சுந்தரம் சுதர்சன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 21. ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் | ~ கௌரவ உறுப்பினர் |
| 22. திரு. சண்முகம் கதிரவன் | ~ கௌரவ உறுப்பினர் |

59ஆவது சபை அமர்வானது கௌரவ தவிசாளர் கனகரெட்ணம் கமலநேசன அவர்களின் தலைமையில் காலை 9.00 மணியளவில் ஒரு நிமிட இறைவணக்கத்துடன், ஆரம்பமானது

அதனைத்தொடர்ந்து 59 ஆவது சபை அமர்விற்கு வருகை தந்த , கௌரவ உப தவிசாளார், கௌரவ உறுப்பினர்கள், மற்றும் செயலாளர், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு கௌரவ தவிசாளர் அவர்களினால் தலைமையுரை நிகழ்த்தப்பட்டது .

கடந்த செவ்வாய்க் கிழைமை 24.01.2023 அன்று சபையின் தவிசாளராக நான் தெரிவுசெய்யப்பட்டதிலிருந்து கடமைகளை செய்துகொண்டு இருப்பதாகவும் அந்தவகையில் பல முறைப்பாடுகள் வந்தபோதும் தீர்க்க் கூடிய முறைப்பாடுகளை தீர்த்துவைத்துள்ளதாகவும் , சபைக்குட்பட்ட நூலகங்கள் மற்றும் முன்பள்ளிகளை சென்று பார்வையிட்டதாகவும் அதில் சில நூலகங்கள் மோசமான நிலையில் காணப்படுவதாகவும் அத்துடன் முன்பள்ளிகளை பார்வையிட்டபோது மிகவும் பின்தங்கிய கிராமங்களிள் இருக்கின்ற முன்பள்ளிகள் மிகவும் மோசமான நிலையைஅடைந்திருப்பதனை தன்னால் காணமுடிந்ததாகவும் ,அத்துடன் சபையில் எதனை முன்னெடுக்கவேண்டும் என்பதனை தெளிவாக இனங்கண்டுள்ளதாகவும் சபையின் ஆளுகைக்குட்பட்ட முன்பள்ளிகள் மற்றும் நூலகங்களைப் புனரமைப்புச் செய்யவேண்டியுள்ளதாகவும் அப்படியான தேவை இவ் ஒருமாத காலத்தில் நிறைவேற்றபடுமா? என்பது கேள்விக்குறி எனவும் அடுத்தமுறை இவ் சபைக்கு தவிசாளராக வருபவரிடம் தான் வினயமாக வேண்டிக்கொள்வது எங்கள் சமூகத்தின் உயிர் நாடி கல்வி எனவும் அதனை சிறார்களுக்கு வழங்க வேண்டியது தலயாய கடமை எனவும் வேண்டிக்கொண்டார். சிறார்களுக்கு மகிழ்ச்சிகரமான சூழலினை ஏற்படுத்தி கற்பிப்பதன் மூலமே எதிர்கால சமூகத்தினை சிறந்த சமூகமாக மாற்றிக்கொள்ள முடியும் எனவும் வறுமைக்கோட்டிற்கு உட்பட்டு வாழும் சிறுவர்கள் சில சமயங்களில் அன்புக்காக ஏங்குபவர்கள் எனவும் அக்குழந்தையின் தாய் மார்கள் அக்குழந்தைக்கு அடுத்தவேளை உணவை வழங்க வேண்டிய தேவையினால் உணவைத் தேடுவதில் கவனத்தை செலுத்துவதனால் அன்பு காட்டுவது சில சமயங்களில் குறைந்து போகலாம் அப்படியான சூழலில் அன்பை எதிர்பாத்து கொண்டிருக்கும் குழந்தைகள் ஒரு மகிழ்ச்சிகாரமான சூழலினை எதிர்பார்த்து வரும்போது அன்பான, மகிழ்ச்சிகரமான சூழலாக பாடசாலைகள் அமைந்துவிடவேண்டும் எனவும் கூறினார். முன்பள்ளி பாடசாலையின் தளபாடங்கள் மிக மோசமாக உள்ளது அங்கு கற்பிக்கின்ற உப ஆசிரியர்களுக்கு சம்பளம் போதாமையாகவும் உள்ளது. இவற்றையெல்லாம் நிவர்த்தி செய்யவேண்டும் எனவும் திகிலிவெட்டை முன்பள்ளியிலுள்ள கதிரைகளின் பின் பகுதிகள் உடைந்து காணப்படுவதாகவும் அவற்றையெல்லாம் பார்வையிட்டு அவர்களின் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்து கொடுக்கவேண்டியது சபையினுடைய கடமை எனவும் குறைந்த வேதனம் பெறுகின்ற ஆசிரியர்களுக்கு மாற்று ஏற்பாடு ஒன்றினை செய்துள்ளதாகவும் சபை நிதியிலல்ல எனவும் தனியார் ஒருவருடைய நிதியின் மூலம் அவர்களுக்கான வேதனத்தினை அதிகரித்துக் கொடுப்பதற்கு உத்தேசித்திருப்பதாகவும் முன்பள்ளியில் சேதமடைந்து காணப்படும் தளபாடங்களைத்திருத்துவதற்கான முயற்சிகளை செய்து கொண்டிருப்பதாகவும்தெரிவித்தார் , கடந்த கிழமை பொருள் பதீவேடு தொடர்பாக அதற்குப்பொறுப்பான அதிகாரியுடன் சென்றிருந்தபோது சில நூலகங்களைத் தரிசிக்க முடிந்ததாகவும் அந்தவகையில் சில நூலகங்கள் மோசமான நிலையில் இருப்பதனை தன்னால் காணமுடிந்ததாகவும் சில நூலகங்களில் புத்தக அலுமரிகள் இல்லாமல் புத்தகங்கள் வெளியிலே இருப்பதையும் கூரை ஓடுகள் உடைந்து ஒழுகுவதாகவும் அவற்றில் புத்தகங்கள் நனையுமாக இருந்தால் எதிர்கால சந்ததியினர் அதனை பயன்படுத்த முடியாமல் போகும் எனவும் இவ்வாறு சில குறைபாடுகள உள்ளதாகவும் குறிப்பிட்டார். ஊழியர்கள் சிலர், வருடத்திற்கு 03 முறை இடமாற்றம் பெற்றவர்களும் இருப்பதாகவும் அவ்வாறான நிலமைகள் எங்களை பாதிக்காது எங்களை நம்பியிருக்கும் சமூகத்தினைப்பாதிக்கும் எனவும் நாங்கள் நேர்மையாக 100 வீதம் இருப்பது கடினம் எனவும் ஆனால் முயற்சிசெய்யவேண்டும் எனவும்

தெரிவித்ததுடன் அதனை ஆரம்ப உரையில் குறிப்பிடுவதற்கு காரணம் நாங்கள் விரும்பயோ விரும்பாமலோ சமூகத்தின் தலைவர்களாக இருப்பதாகவும் எங்களுக்கு சமூகத்தினை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு கடமைப்பாடு இருப்பதாகவும் அவ் நோக்கத்தில்தான் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்வருகின்றோம் எனவும் ஆசைப்பட்டு விருப்பப்பட்டு சேவை செய்வதற்காக வருகின்றோம் அச் சேவையினை நாம் திறம்பட செய்ய வேண்டும் எனவும் அதுதான் ஆத்மிகத்துக்குரிய நிம்மதியும் இறைவனை அடைவதற்கான வழியாக இருக்கும் எனவும் கடந்த காலத்தில் சில தவறுகள் இடம்பெற்றிருக்கலாம் எனவும் தவறுக்கும் மறதிக்கும் இடையில்தான் மனிதன் படைக்கப்பட்டுள்ளான் என திருக்குறான் குறிப்பிடுவதாகவும் நாங்கள் தவறுகள் செய்பவர்கள் மறதிகள் கொண்டவர்கள் எனவும் அதனை திருத்திக்கொண்டு புது மனிதர்களாக நம்மை மாற்றிக்கொள்வது எங்களுக்கு சிறந்ததாக இருக்கும் எனவும், வட்டார உறுப்பினர்கள் என்பது வட்டாரத்தின் தலைவர்கள் எனவும் அவ் வட்டாரங்களில் அமைந்துள்ள சனசமூக நிலையங்கள் முன்பள்ளி பாடசாலைகள் மற்றும் மயானங்கள் என்பவற்றினை அடிக்கடி பார்வையிட வேண்டும் எனவும் அதன் குறைகளை நிவர்த்திசெய்ய முயற்சிக்கவேண்டும் எனவும் அனைவரும் இனிவரும் காலங்களில் உறுப்பினர்கள் சபையிலேயே அவர்களது வட்டாரத்தின் குறைகளை முன்வைத்து அதற்கான தீர்வுகளை சபையிலேயே பெற்றுக்கொள்வேண்டும் எனவும் தான் வெளிப்படையாகத்தன் வேலைகளை செய்ய முற்படுவதாகவும் தெரிவித்ததுடன் ,எமது சமூதாயம் உன்னத நிலையினை அடைவதற்கு எமது செயற்பகாடுகள் திறன்பட அமைய வேண்டும் என வினயமாகக் கேட்டுக் கொள்வதாகவும் தெரிவித்ததுடன்,

பிரதேச சபையினுடைய வளங்களை சரியான முறையில் பயன்படுத்தவேண்டும் எனவும் சபையினுடைய வளங்களைப் பயன்படுத்தி வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற கல்வி கற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புக்களை உருவாக்கவேண்டும் எனவும் அதன் மூலம் சபைக்கு வருமானங்களைப் பெறவேண்டும் எனவும் அதற்கான ஆயத்தங்களை செய்து கொண்டிருப்பதாகவும் எமது சபை நிதி அவ்வாறான வேலைத்திட்டங்களுக்கு போதுமானதாக இல்லை எனவும் வெளியில் இருந்து அவ்வாறான நிதிகளை பெறவேண்டிய கட்டாயத்தில் இருப்பதாகவும் சில வேலைத்திட்டங்களை செயலாளர் முன்மொழிந்துள்ளதாகவும் அந்தவகையில் செயலாளரின் அர்ப்பணிப்பினை மெச்சுவதாகவும் சில வேலைத்திட்டங்களை செயற்படுத்தவேண்டும் என்ற ஆர்வத்தில் அவர் இருப்பதாகவும் தொழில்வாய்ப்புக்களை உருவாக்கவேண்டும் வருமானத்தினை அதிகரிக்கவேண்டும் என்ற உன்னதமான சிந்தனை அவரிடம் காணப்படுவதாகவும் நாங்கள் எமது சிந்தனையை உயர்த்திக்கொண்டு அவருக்குரிய பங்களிப்பினை செய்யவேண்டும் எனவும், இச்சபை உன்னதமான சபையாகவும் நாங்கள் தனித்துவமான உறுப்பினர்களாக ஏனையவர்களுக்கு எடுத்துக்காட்டாகவும் வழிகாட்டியாகவும் அமையவேண்டும் எனவும் எந்த விதமான ஆணவ செருக்கோடு எம்மை வளர்த்துக்கொள்ளாமல் அதனை களைந்து எமது சபையினை முன்னோக்கிச் செல்ல வேண்டும் என கேட்டுக்கொள்வதாகவும் கடந்த கிழமை 96KM வரையில்தான் தான் வாகனத்தினை பயன்படுத்தி இருப்பதாகவும் தெரிவித்தார் , சபையினுடைய பாலர்பாடசாலை நூலகங்கள் மற்றும் முறைப்பாடுகளை பார்வையிடுவதற்கும் பயன்படுத்தியதாகவும் தனியாக செல்வதில்லை எனவும் தன்னுடன் உத்தியோகத்தர் ஒருவரை அழைத்துச் செல்வதாகவும் செயலாளர் அல்லது தொழில்நுட்ப உத்தியோகத்தர் அல்லது பொருள் பதிவேட்டு உத்தியோகத்தர் ஆக இருக்கலாம் எனவும் குறிப்பிட்டதோடு தன்னிடம் பல பிரச்சினைகள் வந்ததாகவும் அது தொடர்பாக அவ் வட்டார உறுப்பினர்களுக்கு அறிவித்து விட்டு சில பிரச்சினைகளைத் தீர்த்து வைத்துள்ளதாகவும் ,சில பிரச்சினைகள் தீர்கப்படமால் உள்ளதாகவும் தெரிவித்ததுடன்,

சில பிரச்சினைகளுக்கு எமது சபையினால் நடவடிக்கைகளை எடுக்கமுடியாமல் உள்ளதாகவும் அந்த வகையில் பிரச்சினைகளை உரிய அதிகாரிகளிடம் கொண்டு செல்வதற்கு தொழிநுட்ப உத்தியோகத்தர்களிடம் கூறியிருப்பதாகவும் அதற்கான ஒழுங்கமைப்பினை பெற்று தீர்வு காண்பார்கள் எனவும் சில முரன்பாடுகள்

அவற்றுக்குள் ஏற்படலாம் எனவும் அதற்காக மக்களுடைய வேலைகளை பின்தள்ளிவைக்கமுடியாது எனவும் தெரிவித்ததுடன் .

இடைக்காலப் பிரேரணையாக கௌரவ உறுப்பினர் திரு. குணராசா குணசேகரன் அவர்கள் 2018ஆம் ஆண்டு முன்னாள் தவிசாளர் சபையை பொறுப்பேற்கும்போது சபையின் நிதி நிலமையினை கூறும்படி கேட்டிருந்ததாகவும் அதனடிப்படையில் செயலாளர் மற்றும் கணக்காளரிடம் தொடர்பு கொண்டு இதற்கான விபரத்தினை தந்துதவுமாறு கேட்டுக்கொண்டதற்கமைவாக 06.04.2018 இல் 11496444.27 ரூபாய் வைப்பிலிருந்ததாக எனக்குக் காட்டப்பட்டது அதேசமயத்தில் அவர்கள் சபையினை விட்டுச் செல்லும் போது 31.12.2022 ஆந்திகதி 203189.60 ரூபாய் மிகுதியாக இருந்ததாகவும் நான் பொறுப்பேற்கும் போது 24.01.2023 ஆந்திகதி 8990201.28 இருந்ததாகவும் தற்பொழுது நேற்றைய நிலையில் (30.01.2023) 1,04,20016.00 இருப்பதாகவும் கணக்காளரினால் எனக்குத்தரப்பட்ட அறிக்கை எனவும் ஆகவே இன்றைய நிலையில் சபையில் இருக்கின்ற பணம் 1,04,20016.00 எனவும் விபரங்களை தனியாக ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் வழங்க முடிவெடுத்தபோது இதனை பிரதியிடுவதற்கு காகிதம் செலவாகும் எனவும் தற்பொழுது பொருளாதார நிலையினை கருத்தில் கொண்டு சபையில் என்னிடம் அல்லது சபையிலோ பார்வையிடலாம் என தெரிவித்ததுடன் தேவைப்படுபவர்களுக்கு நிதிநிலமை தொடர்பான அறிக்கையினை வழங்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்ததுடன் கூட்டறிக்கையில் பிழையிருப்பதாக தெரிவிக்கப்பட்டதற்கு அமைவாக கூட்டறிக்கை திருத்தப்பட்டு ஒப்புதல் அழிக்கப்பட்டு தற்பொழுது அதனை நீங்கள் பார்வையிடலாம் எனவும் கூட்டறிக்கை சபையில் வாசிக்கப்படும் எனவும் தெரிவித்ததுடன் சபையின் வங்கி இலகக்கம் பேணப்படுகின்றது எனவும் அதனடிப்படையில் மக்கள் வங்கி கணக்கிலக்கம் (நிதந்தர வைப்பு) 102600100009558 1,089,9720.0 ரூபாய் நிரதந்தர வைப்பில் இருப்பதாகவும் சாதாரண வைப்பில் ( மக்கள் வங்கி கணக்கிலக்கம் ) 126001000004928 ) 6,158,15.38 ரூபாய் இருப்பதாகவும் , (தேசிய சேமிப்பு வங்கி கணக்கிலக்கம் 2002102321104) 19,81,983.45 ரூபாய் நிலையான வைப்பில் இருப்பு இருப்பதாகவும் தெரிவித்ததுடன் , அத்தோடு 2022 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டங்கள் ஏனைய செலவுகளுக்காக வழங்கப்பட வேண்டிய கடன் தொகை 1,27,90181.96 ரூபாய் எனவும் இது சபையால் செலுத்தவேண்டிய கடன் தொகை எனவும் இதனை விரிவாக ஆராய்ந்து விட்டு அதற்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு உத்தேசித்திருப்பதாக கூறியிருப்பதாக தெரிவித்தார் இதில் ஒருவருடைய வேலைத்திட்டம் மட்டும் 86,10,584.00 ரூபாய் ஆகக் காணப்படுவதாகவும் தெரிவித்துக்கொண்டு தனது தலமையுரையினை நிறைவு செய்தார் .

தவிசாளரின் அறிவித்தல்

கடதாசி ஆலை தவிசாளார் வருகை தந்தாகவும் அவர் 01றீம் கடதாசியினை அன்பளிப்புச் செய்துள்ளதாகவும் அதனை செயலாளரிடம் கையளித்திருப்பதாகவும் இதனை நன்கொடைப் படிவத்தில் இணைத்துக்கொள்ளுமாறு கூறியிருப்பதாகத் சபையில் நன்கொடைப் பதீவேடு ஒன்றினை பேணுமாறு சுட்டிக்காட்டியிருப்பதாக தெரிவித்துக்கொண்டார். அத்தோடு அவர்களுடைய மைதானத்தினை சுத்தம் செய்வதற்காக சபையின் JCB யை கோரியிருந்ததாகவும் தெரிவித்தார்

ஆதே போன்று தவிசாளருடைய வாகனம் பயணம் செய்யும் இடங்களையும் பதிவு செய்யுமாறு கேட்டிருப்பதாக தெரிவித்ததுடன்.

பதிலீட்டு தொழிலாளர்களுக்கான சீருடை 02 வருட காலமாக வழங்கப்படாமல் உள்ளதாகவும் அவர்களுக்கான சீருடையினை திரு.பஞ்சலிங்கம் விமல்ராஜ் அவர்கள் அன்பளிப்புச் செய்வதாக தெரிவித்திருப்பதாகவும் மற்றும் எமது சபையில் கடமைபுரியும் தொழில் நுட்ப உத்தியோகத்தரர்கள்,அலுவலக

பணியாளர்களுக்கான மழை காலத்திற்கான ஆடை என்பவற்றினையும் திரு.பஞ்சலிங்கம் விமல்ராஜ் அவர்கள் அன்பளிப்புச் செய்வதாகவும் தெரிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திரு. கதிரவேலு நல்லரெட்ணம் அவர்களின் விடுமுறை அறிவிப்பினை கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக அங்கீகரித்தனர்.

சபையின் செயலாளர் அவர்கள் நீதிமன்றத்திற்கு செல்லவுள்ளதனால் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் அவர்கள் செயலாளரது கடமையினை புரிவார் என கௌரவ தவிசாளர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் அவர்களால் கடந்தமாதக் கூட்டறிக்கை வாசிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர்கள் கடந்தமாதக் கூட்டக்குறிப்பில் கௌரவ உறுப்பினர் அவர்களால் உரையாற்றப்பட்ட விடயங்கள் சில உள்ளடக்கப்படவில்லை எனவும் அதனை திருத்தம் செய்து அடுத்த சபை அமைர்வில் சமர்பிக்குமாறு கேட்டுக்கொண்டனர்

அதனைத் தொடர்ந்து கடந்த மாதக் கூட்டக் குறிப்பானது திருத்தங்களுடன் அடுத்த சபை அமர்வில் சமர்பிக்கப்படும் என தனது கருத்தினைப்பதிவு செய்தார்.

## 2023ஆம் ஆண்டுக்கான பாதீடு சமர்ப்பித்தல்

2023ஆம் ஆண்டுக்கான பாதீடு கௌரவ தவிசாளரர் அவர்களால் சமர்பிக்கப்பட்டு பாதீடு தொடர்பான விளக்க உரை நிகழ்த்தப்பட்டது அவ் உரையில் எமது சபைக்கு வருமானமாக 14,70,58,000.0.ரூபாய் வருவதற்கு எதிர்பாத்துள்ளதாகவும் இதில் வீத வரிகள் வாடகை வியாபார நிலையங்களுக்கான அனுமதிப்பத்திரம் , சேவைக்கான கட்டணங்கள் ஏனைய வருமானங்கள் அரசிறைவருமானங்கள் உட்பட இவ் மேற்குறிப்பிட்ட தொகை அடங்குவதாகவும்

இவ் வருடம் எதிர்பார்க்கப்படும் நடமுறைச் செலவீனம் 11,043,5000.00 வருமானத்திலிருந்து செலவினை கழிக்கும் போது இருப்பு 3,27,53000.00 ரூபாய் எனவும் மிகுதி வருமானத்தில் மூலதனச் செலவுக்காக 3,27,50,000.00ரூபாய் ஒதுக்கப்படுவதாகவும் இதைத்தவிர 1,12,00000.00 PSDG நிதியும் மற்றும் CBG திட்டங்கள் ஏனைய நன்கொடைகள் மூலம் பொறுவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது எனகூறிக்கொண்டு தனது பாதீட்டு உரையினை நிறைவுசெய்தார்.

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் அவர்கள் கடந்தமுறை தவிசாளராக இருந்து எங்களால் சமர்பிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டதிலிருந்து சிறிய மாற்றத்துடன் தான் இவ் வரவு செலவுத்திட்டம் சமர்பிக்கப்பட்டுள்ளதாகவும் நாங்கள் ஒதுக்கியதைப்போலவே வட்டாரங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் மேலதிகமாக 12,00000.00 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் சில கௌரவ உறுப்பினர்களுக்கு வரவுசெலவுத் திட்ட புத்தகம் கிடைக்கவில்லை என்பதனை சுட்டிக்காட்டவேண்டியது முக்கியமான விடயம் எனவும் எங்களுடைய தவிசாளர் பதவிக்கு வருவதற்கு உணர்வு பூர்வமாக மக்களைத் தூண்டியோ இன்னொருவருக்கு ஆசைவார்த்தை காண்பித்து அவருடைய முதுகில் குத்தியோ தவிசாளர் பதவியினை பெறவேண்டும் என்ற நிலை எமக்கு இருக்கவில்லை

எனவும் பூரணமாக வரவுசெலவுத்திட்டத்தினை சமர்ப்பிப்பதனை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் எமது சார்பான தீர்மானம் தவிசாளரால் சமர்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவோ அல்லது எதிர்போ வழுங்குவதில்லை எனவும் நடுநிலையான போக்கினை வகிப்பதாக முன்னெடுத்திருப்பதாகவும் காரணம் மக்களுனுடைய அபிவிருத்தித் தேவைப்பாட்டுக்கான வேலைத்திட்டங்கள்தான் இங்கும் முன்மொழியப்பட்டிருப்பதாகவும் ஏற்கனவே முன்மொழியப்பட்டிருப்பதாகவும் இருந்தபோதும் மக்களுடைய அபிவிருத்திப்பாதையில் எவ்விதமான தடங்கல்களையும் ஏற்படுத்தமாட்டோம் எனவும் இதை ஒரு முன்னுதாரணமாகக்கொண்டு இனிவரும் காலம் வருகின்ற தலைவர்கள் கௌரவ உறுப்பினர்கள் நடந்து கொள்ளவேண்டும் என கேட்டு சந்தர்பத்தினை வழுங்கியமைக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

ஆதற்குப் பதிலளித்த கௌரவ தவிசாளர்அவர்கள் வரவு செலவுத்திட்டத்தில் முற்பகுதியில் இருக்கும் விடயங்களெல்லாம் நிர்வாகத்திற்கு உட்பட்ட விடயங்கள் எனவும் ஆனாலும் மூலதனச்செலவில் மாற்றங்களை செய்ததாகவும் சகல உறுப்பினர்களுக்கும் பிரித்துக்கொடுத்ததாகவும் , சகல வழுஙகளும் சகலருக்கும் பிரயோகிக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொண்டாார்.

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன் அவர்கள்** கடந்த காலங்களில் முறையற்ற செயற்பாடுகள் ஊழல்கள் வெளிக்கொண்டு வந்ததன் நிமிர்த்தம் தான் பல குழப்பங்கள் ஏற்பட்டது எனவும் பல முறைகேடுகள் நடைபெற்றதாகவும் கௌரவ உறுப்பினர்களுக்கான உரிமை சமமாக பகிர்தளிக்கப்படவில்லை எனவும் அதனால் ஆட்சியில் பாரிய அதிர்ப்தி ஏற்பட்டு மாற்று வழிக்கு வரவேண்டிய தேவை இருந்ததாகவும் அதன் மாற்றத்தை தான் வரவேற்பதாகவும் கண்கெட்ட பின் சூரியநமஸ்காரம் போன்று இப்போது இவ் தீர்மானத்தினை முன்னைய ஆட்சியாளர்கள் எடுத்திருப்பது என்பது நல்லவிடயம் எனவும் இப்போதாவது இவ் எண்ணம் வந்ததினை பாராட்டுவதாகவும் தெரிவித்ததுடன் இரண்டு பாதீடுகள் கடந்த முறை தோற்கடிக்கப்பட்டதாகவும், தன் மீது காழ்புணர்சியினை இது தொடர்பாக கொட்டியிருப்பதாகவும் அதற்குரிய பதிலை வழுங்கியிருந்ததாகவும் தெரிவித்ததுடன் இங்கு நடைபெற்றது ஒரு ஜனநாயகமாற்றம் எனவும் கடந்த காலங்களில் நேர்மையான விடயங்களுக்கு ஒத்துழைப்பு வழுங்கியிருப்பதாகவும். நேர்மையாக நடக்காத விடயங்களை எதிர்தாகவும் தெரிவித்தார்.

அதனைத் தொடந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா அவர்கள் தான் பேரம் பேசி ஆதரவு வழுங்கியதாக கூறப்பட்டிருப்பதாகவும். கௌரவ அமைச்சர் அவர்களை சந்தித்து எங்களுடைய காணியை பிரித்துதரும்படி அவருடைய காலில் விழுந்ததாக செய்திகளில் பேசப்பட்டதாகவும் இவ் பேரம் சரிவராத காரணத்தினால்தான் பாதீட்டுக்கு எதிராக வாக்களித்ததாக கூறப்பட்டதாகவும் கூறினார் அத்தோடு கௌரவ அமைச்சர் அவர்களை கடந்த பாதீட்டு நேரம் கண்டதே தவி வேறு எவ்விடத்திலும் கண்டதில்லை எனவும் முகப்புத்தகம் செய்திகள் வாயிலாகத்தான் கண்டிருப்பதாகத் தெரிவித்ததுடன் எல்லை பிரித்து தந்தால் தான் பாதீட்டுக்கு ஆதரவு வழுங்குவோம் என தெரிவித்ததாக கூறப்பட்ட விடயம் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் என தெரிவித்ததுடன் இறைவனைத் தவிர யாருடைய காலிலும் விழவேண்டிய அவசியம் இல்லை எனவும் , கடந்த முறை எங்களுக்கு எவ்விதமான அபிவிருத்தித் திட்டங்களும் நடைபெறவில்லை எனவும் புதிய நிர்வாகம் வந்தால் பெண்களுக்கான வேலைத்திட்டங்கள் கிடைக்கும் எனவும் அதன் மூலம் பெண்களுக்கான அரசியலை வழக்கமுடியும் என நம்பிக்கையில்தான் தற்பொழுதுள்ள தவிசாளரினை தெரிவு செய்ததாகவும் தெரிவித்ததுடன் யாரிடமும் நாங்கள் சோரம் போறவர்கள் இல்லை என தனது கருத்தினை பதிவு செய்தார் .

அதனைத் தொடந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. பொன்னையா புஸ்பேந்திரன் அவர்கள் நிகழ்ச்சி நிரலில் உள்ள விடயங்களை மாத்திரம் தான் உள்ளடக்கவேண்டும் என தவிசாளரிடம் கேட்டுக்கொண்டாார்

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. குணராசா குணசேகரன் அவர்கள் பதீட்டினை சிறு மாற்றங்கள் செய்து சமர்பித்ததாக முன்னாள் தவிசாளர் கூறியிருந்ததாகவும் மக்கள் நலம் சாந்து இருப்பதற்காக சிறு திருத்தங்கள் தற்பொழுதுள்ள பாதீட்டில் செய்யப்பட்டுள்ளதாகவும் இப் பாதீட்டில் ஒரு உறுப்பினரும் பாதிக்கப்படக் கூடாது என்பதனை இப்பாதீட்டினை பார்த்து தெரிந்து கொண்டதாகவும் 2023ஆம் ஆண்டுக்கான பாதீட்டு தொடர்பான கலந்துரையாடல் இவ் பாதீட்டில் மட்டும்தான் நடந்ததாகவும், மக்களுடைய விடயங்களை முன்னிண்டு இவ் பாதீட்டுக்கு அப்பால் செய்ய வேண்டும் என அவர் இருப்பதாகவும் இரு சமூகமும் தங்களது பிரச்சினையினை ஒரே மேசையில் இருந்து கதைத்து தீர்வினைக்காண வேண்டும் எனக் கூறியதுடன் வளங்கள் சரியான முறையில் பகீரப்படவேண்டும் எனவும் வாகனத் திருத்தத்திற்காக அமைக்கப்பட்ட கட்டிடத்தில் தெளிவின்மை இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் அவர்கள் தான் 58வது கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணை இனரீதியான பிரேரணை இல்லை எனகுறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு.கந்தசாமி பகீரதன் அவர்கள் 58 மாதகாலங்களாக அனைத்துக் கூட்டறிக்கைகளும் திருத்தங்'களுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும், கூட்டறிக்கை சரியாக தயாரிக்கப்படவில்லை என்ற முன்னாள் தவிசாளரின் குற்றச்சாட்டுக்கு அமைய எவ்வாறு உங்கள் காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட கூட்டறிக்கையில் கையொப்பத்தினை இட்டீர்கள் என்ற கேள்வியை எழுப்பினார். கூட்டறிக்கை உடன் எழுதப்படுமானால் கூட்டறிக்கையில் பிழைவராது என்பதுடன் நிர்வாகமும் சிறப்பானதான இயங்கும் எனவும் குறிப்பிட்டார். அத்துடன் நிர்வாகத்தில் பிழை வருமானால் சமூகம் ஒட்டுமொத்தமாக பாதிக்கப்படும் என்பதோடு நிர்வாகம் சிறப்பாக இயங்கவேண்டும் என கேட்டுக்கொண்டதோடு, சனநாயக ஆட்சிபற்றி கருத்துக்களை தனது உரையில் தெளிவுபடுத்தினார்

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் அவர்களால் புதிய தவிசாளரால் 2023ஆம் ஆண்டுக்கான பாதீட்டினை ஏன் நாம் ஆதாரிக்க வேண்டும் முன்னால் தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட பாதீடு தெளிவில்லாத தன்மையில் காணப்பட்டதாகவும் பாதீடு மக்கள் நலன் சார்ந்துதான் இருக்கவேண்டுமே தவிர தனிநபருடைய நலனுக்காக பாதீட்டினை கொண்டு வரும் பொழுது அதனை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் கடந்த காலங்களில் பாதீடு சமர்ப்பிக்கப்படும் பொழுது அதற்கான சரியான வரைவிலக்கணம் சொல்லப்படவில்லை பாதீடு தொடர்பான தெளிவின்மை காரணத்தினாலும் பாதீட்டில் சொல்லப்படுகின்ற தொகை பாதீடு நிறைவேற்றிய பிற்பாடு மக்களுக்கு சென்றடைகின்றதா என்று பார்த்தால் அது பூச்சியமாகும். அத்துடன் தற்பொழுது கடனாகவுள்ள 12700000.00 ரூபாய் எதற்கு செலவளிக்கப்பட்டது என பாரத்தால் வெறும் கிறவல் வீதிகளுக்கு மாத்திரம் எனவும் போடப்படாத வீதிகளுக்கு பணம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஒரு உறுப்பினருடைய வீட்டில் 30 LED மின்குமிழ் காணப்பட்டதாகவும் அதனை தாங்கள் நல்லவராக காட்டிக் கொள்வதற்காக சில அமைப்புகளிடம் கையளிக்கப்பட்டு இருப்பதாக கூறினார்

பாதீட்டுக்காக எதிர்காலத்தில் உங்களைப்போன்று நேர்மையான வெளிப்படைத்தன்மையில் நடக்கக் கூடிய தவிசாளராகக் காணப்படும் உங்களால் பாதீட்டில் உள்வாங்கப்பட்டவிடயங்கள் எந்தவொரு சந்தர்பத்திலும் உறுப்பினர்களின் தலையிடு இல்லாமல் செயற்படுத்தப்படவேண்டும் எனவும், பாதீட்டிற்கு ஆதரவு தருவதாக இருந்தால் வேலைத்திட்டங்கள் வெளிப்டைத் தன்மையுடன் மக்களுக்கு சென்றடைய வேண்டும் எனவும் இதயசுத்தியோடும் வெளிப்படைதன்மையோடும், இனவதமற்ற சிந்தனையோடும் பயணிக்கின்றதனால் எந்தவொரு பேரம் பேசும் சக்தி இல்லாமலும் எந்தவொரு கோரிக்கை இல்லாமலும் எந்தவொரு விடயங்களை முன்வைக்காமலும் 3 பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்களுக்கும் மீதமான

வேலைத்திட்டங்களை முன்னெடுப்பீர்கள் எந்தவொரு பிரச்சனையும் உங்கள் ஊடாக வரதது என்ற நம்பிக்கையில் பாதீட்டிற்கு முழுஆதரவினையும் வழங்குவதாக தனது கருத்தினைப் பதிவு செய்தார்.

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. சுந்தரம் சுதர்சன் அவர்கள் பிரதேச சபை கட்டளைச்சட்டத்தின் படி எந்தவோரு கட்சியயோ கட்சி சார்ந்த பெயர்களையோ பயன்படுத்தக் கூடாது என்பது கடந்த காலங்களில் பேசப்பட்டாலும் அவ் வரமுறைகள் இங்கு மீறப்பட்டுள்ளதாகவும் . ஒட்டுமொத்தமாக பதீடு தோற்கடிக்கப்பட்டது இவ் பாதீட்டு புத்தகத்திறக்காக அல்ல எனவும் ஒரு கட்சி ஒரு தலமைத்துவத்திற்காக என்பதனை ஏறறுக்காள்ளவேண்டும் எனவும் 5 வருடத்திலும் கொண்டு வரப்பட்ட பாதீட்டிலும் எவ்வித மாற்றம் இல்லை எனவும்

தவிசாளர் ஆசனத்தில் யார் அமர்ந்திருந்தாலும் யாரையும் திருப்திபடுத்த முடியாது எனவும் ஊழல் நடக்கவில்லை என்றும் இல்லை அனைவரும் நியாயமாக நடந்து கொளகின்றார்களா? என்பதும் இல்லை எல்லோரும் அவர்களது கட்சி தலமை சார்ந்துதான் செயற்படுகிறார்கள் எனவும் மக்களுக்காக வந்திருக்கின்றோம் மக்களுக்காக ஏதாவது செய்யவேண்டும் எனவும் சமூகம் சார்ந்து பிரேரணைகள் கொண்டுவரும் பொழுது யாராக இருந்தாலும் நான் எதிர்த்துவாக்களிப்பவன் இல்லை எனவும் குறை நிறை களை பேசிக்கொண்டிருப்பது ஆரோக்கியமான அரசியலாக இருக்காது எனவும் அது கட்சி அரசியல் எனதெரிவித்துக்கொண்டு தனது உரையினை நிறைவுசெய்தார்.

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. காளிக்குட்டி நடராசா அவர்கள் இதுவரைக்கும் பாதீடு தொடர்பான தகவல் கிடைக்க வில்லை எனவும் இப்பாதீடானது முதல் தயாரித்ததுபோல் இத் தடவையும் இருப்பதனால் நான் பாதீட்டிற்கு நடுநிலை வகிப்பதாகவும் ஏன் எனில் பாதீடு தனதுகரங்களுக்கு கிடைக்கவில்லை என தனது கருத்தினைப் பதிவு செய்தார்

அதனைத் தொடர்து 2023ஆம் ஆண்டுக்கான பாதீடுட்டினை கௌர உப தவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன் அவர்கள் முன்மொழிந்ததுடன் அதனை கௌரவ உறுப்பினர் ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து 2023ஆம் ஆண்டுக்கான பதீடு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதுடன் ,

2023ஆம் ஆண்டிற்கான பாதீட்டிற்கு ஆதரவாக பின்வரும் 13கௌரவ உறுப்பினர்கள் வாக்களித்ததுடன்

| இல | பெயர் | பதவி | ஆம் | இல்லை | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | திரு. கனகரெட்ணம் கமலநேசன் | தவிசாளர் | √ | | |
| 02 | திரு. தர்மலிங்கம் யசோதரன் | உப தவிசாளர் | √ | | |
| 03 | ஜனாப். முஹம்மது புஹாரி முஹம்மது வாசுதீன் | உறுப்பினர் | √ | | |
| 04 | திரு. குணராசா குணசேகரன் | உறுப்பினர் | √ | | |
| 05 | திரு. கந்தசாமி பகீரதன் | உறுப்பினர் | √ | | |
| 06 | திரு. கிருஷ்ணப்பிள்ளை சேயோன் | உறுப்பினர் | √ | | |
| 07 | திருமதி. பொன்னையா கலைவாணி | உறுப்பினர் | √ | | |
| 08 | திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி | உறுப்பினர் | √ | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 09 | **திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர்** | உறுப்பினர் | √ | | |
| 10 | **திரு. சுந்தரம் சுதர்சன்** | உறுப்பினர் | √ | | |
| 11 | **ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா** | உறுப்பினர் | √ | | |
| 12 | **ஜனாப். காமிது லெப்பை இப்றாஹிம்** | உறுப்பினர் | √ | | |
| 13 | **திரு. சண்முகம் கதிரவன்** | உறுப்பினர் | √ | | |

2023ஆம் ஆண்டுக்கான பாதீடு வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது பின்வரும் 06 உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர்

| இல | பெயர் | பதவி | ஆம் | இல்லை | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | **திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்** | உறுப்பினர் | | | நடுநிலை |
| 02 | **திரு. காளிக்குட்டி நடராசா** | உறுப்பினர் | | | நடுநிலை |
| 03 | **திரு. சிற்றம்பலம் கிருபாகரன்** | உறுப்பினர் | | | நடுநிலை |
| 04 | **திரு. பொன்னையா புஸ்பேந்திரன்** | உறுப்பினர் | | | நடுநிலை |
| 05 | **திரு. சாமித்தம்பி மணிசேகர்** | உறுப்பினர் | | | நடுநிலை |
| 06 | **ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப** | உறுப்பினர் | | | நடுநிலை |

2023ஆம் ஆண்டிற்கான பாதீடு வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது பின்வரும் 03 கௌரவ உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை

| இல | பெயர் | பதவி | ஆம் | இல்லை | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | **திரு. சீனித்தம்பி தர்மலிங்கம்** | உறுப்பினர் | | | கலந்துகொள்ள வில்லை |
| 02 | **ஜனாப் சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ்** | உறுப்பினர் | | | கலந்துகொள்ள வில்லை |
| 03 | **ஜனாப் ஆதம்லெப்பை அப்துல் கபூர்** | உறுப்பினர் | | | கலந்துகொள்ள வில்லை |

அதனைத் தொடர்ந்து 2023ஆம் ஆண்டிற்கான பாதீடானது 13 வாக்குகளினால் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது

## தீர்மானங்களை நிறைவேற்றல்

01. **திர்மானஇல:-**தீர்மான இலக்கம் **KPPS/M.MEETING/59/JANUARY/01/2023**

- **2023ம் ஆண்டிற்கான கோள்விச் சபை அங்கத்தவர்களை நியமிப்பதற்கான சபை அங்கீகாரம் பெறல்**

### திறத்தல் குழு உறுப்பினர்களை நியமித்தல்.

(1) திரு. கனகரெட்ணம் கமலநேசன் ~ கௌரவ தவிசாளர் ~தலைவர்
(2) திரு ச.நவநீதன்~ செயலாளர் ~ உறுப்பினர்
(3) ஜனாப். S.A.M நியாஸ் ~ பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ~~ உறுப்பினர
(கோ.ப.மே.பி.செ)

### தொழில்நுட்பக் குழு

01. திரு.S.லோகானந்ததாசன் -வேலை நிர்மான அத்தியட்சகர்
(நிர்மாண வேலை அத்தஜயட்சகர் ~உ.உ.ஆ.அலுவலகம்) ~~ உறுப்பினர்

02. திரு.T.அருட்செல்வன் ~(தொழிநுட்ப உத்தியோகத்தர் கோ.ப.பி.ச)~ ~ உறுப்பினர்

03. திரு.விக்கினராசா ~ ~(தொழிநுட்ப உத்தியோகத்தர் ம.மே.பி.சபை)~ ~ உறுப்பினர்

**பெறுகைக்குழு உறுப்பினர்களை நியமித்தல்.**

01. திரு. கனகரெட்ணம் கமலநேசன் ~ கௌரவ தவிசாளர் ~ தலைவர்

02. திரு ச.நவநீதன்~ செயலாளர் ~ உறுப்பினர்

03. திரு. S.A.M நியாஸ் ~ பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ~ உறுப்பினர்
(பிரதேச செயலகம், கோ.ப.மே.பி.செ)

மேற்படித் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் அவர்கள் முன்மொழிந்ததுடன் அதனை கௌரவ உறுப்பினர் ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து **KPPS/M.MEETING/59/JANUARY/01/2023 லக்கத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதுடன் தீர்மானத்திற்கு ஆதரவாக தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் ஆதரவாக வாக்களித்ததனால் KPPS/M.MEETING/59/JANUARY/01/2023 இலக்கத் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது**

## 02. திர்மானஇல:-தீர்மான இலக்கம் KPPS/M.MEETING/59/JANUARY/02/2023

- **2023ஆம் ஆண்டுக்கான நிலையியல் குழுக்களுக்கான சபை அங்கீகாரம் பெறல்**

01. நிதி மற்றும் கொள்கை உருவாக்க

| இல | பெயர் | பதவி | முன்மொழிந்தவர் | வழிமொழிந்தவர் |
|---|---|---|---|---|
| 01 | திரு. கனகரெட்ணம் கமலநேசன் | கௌரவ தவிசாளர் | ஏகமனதாக | ஏகமனதாக |
| 02 | திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் | கௌரவ உறுப்பினர் | ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் | திரு.சுந்தரம் சுதர்சன் |
| 03 | திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன் | கௌரவ உறுப்பினர் | திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி | ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் |
| 04 | திரு. சுந்தரம் சுதர்சன் | கௌரவ உறுப்பினர் | திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் | திரு.சண்முகம் கதிரவன் |
| 05 | திரு. குணராசா குணசேகரன் | கௌரவ உறுப்பினர் | திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன் | திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் |
| 06 | திரு. சண்முகம் கதிரவன் | கௌரவ உறுப்பினர் | திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் | ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் |

02. வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி குழு

| இல | பெயர் | பதவி | முன்மொழிந்தவர் | வழிமொழிந்தவர் |
|---|---|---|---|---|
| 01 | ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் | கௌரவ உறுப்பினர் | ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் | ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா |
| 02 | திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி | கௌரவ உறுப்பினர் | ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா | திருமதி. பொன்னையா கலைவாணி |
| 03 | திருமதி. பொன்னையா கலைவாணி | கௌரவ உறுப்பினர் | ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் | ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் |
| 04 | ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா | கௌரவ உறுப்பினர் | திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி | ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் |
| 05 | திரு. சண்முகம் கதிரவன் | கௌரவ உறுப்பினர் | ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா | ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் |

03. தொழில்நுட்ப சேவைகள் குழு

| இல | பெயர் | பதவி | முன்மொழிந்தவர் | வழிமொழிந்தவர் |
|---|---|---|---|---|
| 01 | ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் | கௌரவ உறுப்பினர் | ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் | திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி |
| 02 | ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் | கௌரவ உறுப்பினர் | ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் | திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி |
| 03 | திரு. சுந்தரம் சுதர்சன் | கௌரவ உறுப்பினர் | ஜனாபா. மஹ்முதுலெவ்வை நபீரா | ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் |
| 04 | ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் | கௌரவ உறுப்பினர் | ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் | திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி |
| 05 | திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர் | கௌரவ உறுப்பினர் | ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் | ஜனாபா. மஹ்முதுலெவ்வை நபீரா |

04. சுற்றாடல் வாழ்வசதிகள் குழு

| இல | பெயர் | பதவி | முன்மொழிந்தவர் | வழிமொழிந்தவர் |
|---|---|---|---|---|
| 01 | திரு. கனகரெட்ணம் கமலநேசன் | கௌரவ தவிசாளர் | ஏகமனதாக | ஏகமனதாக |
| 02 | திரு. குணராசா குணசேகரன் | கௌரவ உறுப்பினர் | ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் | திரு.சுந்தரம் சுதர்சன் |
| 03 | ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் | கௌரவ உறுப்பினர் | ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் | திரு.சுந்தரம் சுதர்சன் |
| 04 | ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் | கௌரவ உறுப்பினர் | திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் | திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர் |
| 05 | ஜனாபா. மஹ்முதுலெவ்வை நபீரா | கௌரவ உறுப்பினர் | ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் | ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் |
| 06 | ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் | கௌரவ உறுப்பினர் | ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் | திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி |

05. ஆலோசனை வழிகாட்டல் குழு

| இல | பெயர் | பதவி | முன்மொழிந்தவர் | வழிமொழிந்தவர் |
|---|---|---|---|---|
| 01 | திரு.கிருஷ்ணப்பிள்ளை | விவசாயி | திரு.குணராசா குணசேகரன் | திரு.சுந்தரம் சுதர்சன் |
| 02 | திருமதி.சந்திரலேகா சதிஸ்குமார் | | திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி | ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் |
| 03 | M.S.றபீக் | | ஜனாபா. மஹ்முதுலெவ்வை நபீரா | ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் |
| 04 | திரு.சுப்பிரமணியம் சிற்றம்பலம் | | திரு.சுந்தரம் சுதர்சன் | திரு. சண்முகம் கதிரவன் |
| 05 | திரு.M.A.M.முசாமீல் | | ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் | திரு. சண்முகம் கதிரவன |
| 06 | திருM.L.ஜவாத் | | ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் | ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் |
| 07 | திருமதி.வசந்தராணி ஞானசேகரம் | | திருமதி. பொன்னையா கலைவாணி | திரு.குணராசா குணசேகரன் |
| 08 | திரு.பாலச்சந்திரன் குமார் | | திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி | ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் |
| 09 | திரு.அசனார்.சஜீத் | | ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் | ஜனாபா. மஹ்முதுலெவ்வை நபீரா |

மேற்படித் தீர்மானத்தினை திரு. சண்முகம் கதிரவன் அவர்கள் முன்மொழிந்ததுடன் அதனை கௌரவ உறுப்பினர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து **KPPS/M.MEETING/59/JANUARY/02/2023 இலக்கத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதுடன் தீர்மானத்திற்கு ஆதரவாக தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் ஆதரவாக வாக்களித்ததனால் KPPS/M.MEETING/59/JANUARY/02/2023 இலக்கத் தீர்மானம் இங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது**

**இறுதியாக கௌரவ தவிசாளர் அவர்களின் நன்றியுரையுடன் 59 ஆவது சபை அமர்வானது பிற்பகல் 1.00 மணியளவில் இனிதே நிறைவுசெய்யப்பட்டது.**

……….................………………….
திரு. கனகரெட்ணம் கமலநேசன்
தவிசாளர்
கோறளைப்பற்று பிரதேச சபை,
வாழைச்சேனை.